19-10-2024.
O.S.No. 176/2020

வா. சா. 4 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

இந்த வழக்கில் சின்னம்மாளின் கணவர் வாதசா1 சொல்லித்தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரியல்ல. சின்னம்மாளும் விவரம் சொன்னார். 19.03.2001 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.10 19.03.2001 தேதியிட்ட கிரைய ஆவணம் 10 பக்கம் கொண்டதை வாதசாஆ.1 தரப்பில் ஒரு பக்கம் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தில் நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளது போல் நல்லழகன் அம்பலம் 28.12.2000 ம் தேதியில் அட்வான்சாக ரூ.1,66,800/- ரொக்கம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டு உள்ளது. 1 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்கும்போது கிரைய தொகையை குமாரிடம் இருந்து பெற்றதாகத்தான் வாசகம் கண்டுள்ளது என்றால் சரியல்ல. பத்திரம் போடும் போதுதான் குமார் என்பவர் யார் என்பது எனக்கு தெரியவந்தது. கிரையம் பெற்ற சொத்தில் 1 ம் பிரதிவாதி குமார் இன்றுவரை வசித்து வருகிறார் என்றால் சரிதான். 19.03.2001 ம் தேதி மீதி கிரைய தொகை ரூ.3 லட்சத்தை நல்லழகன் அம்பலம்தான் கொடுத்தார் என்ற விவரம் கிரைய ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். இதுபோன்ற கிரைய ஆவணங்களில் பொதுவாக பயிர் என குறிப்பிடப்பட்டுள்ளது விவசாய தொழிலை குறிக்கும் என்றால் சரிதான். வாதசாஆ.10 ல் என் பெயருக்கு முன்பும், குமார் பெயருக்கு முன்பும் பயிர் என குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் சரிதான். நாங்கள் இருவருமே விவசாயம் செய்து வருகிறோம். வாதசா.1 சொன்னதன் பேரில் 1 ம் பிரதிவாதி குமார் எந்த தொழிலும் செய்துவரவில்லை என நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிவு

செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை 1ம் பிரதிவாதி பெயருக்கு நிறைவேற்றிக் கொடுத்துவிட்டு அந்த சங்கதிகளுக்கு மாறாக தற்போது சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை -இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.10.19 14:54:51 +0530

Principal District Judge,
Dindigul.